எனது மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட தென்பொன்முடி பகுதியில் அமைந்துள்ள E.A.B. அரசு மேல்நிலைப் பள்ளியில் தற்போது *500* மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். *2011-2012* ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட அந்த நடுநிலைப் பள்ளியில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் படிக்கின்ற காரணத்தினால், வருங்காலத்தில் அந்தப் பள்ளிக்கு மாணவர் விடுதி அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு, ஆய்வு செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் *359*, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

359—

தரம் உயர்த்துதல்

***5474**—**திரு. கா.கோ. ரமேஷ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஊராட்சி ஒன்றியம், குனிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஊராட்சி ஒன்றியம், குனிச்சி ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு, ரூ.81 இலட்சத்தில் புதியதாகக் கட்டடங்கள் கட்டப்பட்டு, மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு, 24-2-2014 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் திறந்து வைக்கப்பட்டு, தற்போது பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.

திரு. கா.கோ. ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றி! வெற்றி! வெற்றி என எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி! (மேசையைத் தட்டும் ஒலி) சரித்திரத்தின் பக்கத்தில் எல்லாம் வெற்றி. சாதனைப் பட்டியலில் வெற்றி! சட்டமன்றத் தேர்தலில் வெற்றி! சட்டமன்ற இடைத் தேர்தலில் வெற்றி! ஊரே சொல்லும் உள்ளாட்சி மன்றத் தேர்தலில் வெற்றி! நாடே சொல்லும் மாநகராட்சி மன்றத்தில் வெற்றி! கைகள் குலுங்க குலுங்க கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் வெற்றி! பாராளுமன்றத் தேர்தலில் 39-ல் 37 தொகுதிகளில் இந்திய தேசமே வியக்கத்தக்க வகையில் பார்போற்றும் மாபெரும் வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றி மேல் வெற்றி குவித்த வீரத்தாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கந்திலி ஒன்றியம், குனிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி, ரூ.81 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் வழங்கி, தங்களின் திருக்கரங்களால் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்த

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

மேலும், திருப்பத்தூர் தொகுதி, அரசு பொது மருத்துவமனையில் அவசரச் சிகிச்சைப் பிரிவிற்குப் புதியதாகக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதி, அரசு பொது மருத்துவமனை தொடர்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.*

திரு. கா.கோ. ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழழகன் அவர்கள்.*

திரு. க. தமிழழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மூன்றாவது முறையாக முதல்வர் அம்மா! எல்லோரும் வணங்கக்கூடிய மூன்றாம் பிறையே நீங்கள்தான் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) சாதிக் கட்சிகளுக்குப் பல தலைவர்கள் அம்மா! சாதித்த ஒரே தலைவி நீங்கள்தான் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) வீடாக இருந்தாலும் அம்மா! தமிழ் நாடாக இருந்தாலும் அம்மா! எங்கள் அம்மா நீங்கள்தான் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) மற்றத் தலைவர்கள் எல்லாம் சும்மா. உங்களுக்கு நிகர் இங்கு யார் அம்மா! வீரம் தரும் மந்திரம்*

2014 ஆகஸ்ட் 6]

அம்மா! வாழ்வு தரும் மந்திரம் அம்மா! நலம் தரும் மந்திரம் அம்மா! நான்கு வேத மந்திரம் அம்மா! அன்பு என்னும் மந்திரம் அம்மா! அம்மா என்னும் மந்திரமும் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் என்றாலே நீங்கள்தான் அம்மா! தாய் இல்லாமல் இங்கு யாருமே இல்லை. அம்மா தயவு இல்லாமல் இங்கு நான் உட்பட யாருமே வந்தது இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) கிரிக்கெட்டில் முதல் இரட்டைச் சதம் அடித்த பெருமை இந்தியாவையேச் சாரும், இது உலகச் சாதனை. வருகின்ற 2016 சட்டமன்றத் தேர்தலில் இரட்டைச் சதம் தாண்டி 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் வெல்லப்போவது உறுதி. இந்தியாவிலும், தமிழ்நாட்டிலும் யாருமே, எப்போதுமே சாதிக்க முடியாத இந்தச் சாதனையைப் படைக்கப்போவது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-55

'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்று சொல்வார்கள். 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்பார்கள். 234-ம் பின்னால் வருகிறது என்பதைச் சொல்லத்தான், 37 முன்னாலேயே வந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இது உண்மைக்குக் கிடைத்த வெற்றி. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்ல திட்டங்களுக்கும், நலத் திட்டங்களுக்கும் கிடைத்த வெற்றியாகும். (மேசையைத் தட்டும் ஒலி) நெற்களமாக இருந்தாலும் மாண்புமிகு அம்மா அவர்களுக்குத்தான் வெற்றி, போர்க்களமாக இருந்தாலும் மாண்புமிகு அம்மா அவர்களுக்குத்தான் வெற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) எந்தத் தேர்தல் களமாக இருந்தாலும் மாண்புமிகு அம்மா அவர்களுக்குத்தான் வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த தனிமையில் போராடி, உச்ச நீதிமன்றம் வாயிலாகத் தீர்ப்பைப் பெற்று, விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றியது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதன் வாழ்வதற்குப் பல அடி மண் தேவைப்படுகிறது. தமிழக மக்கள்

வாழ்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் காலடி மண் தேவைப்படுகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது திட்டக்குடி தொகுதிக்குட்பட்ட அடரி என்ற ஊராட்சி, ஏறக்குறைய 13 கிராமங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. ஏற்கெனவே அங்கு செயல்பட்டு வந்த ஆரம்ப சுகாதார நிலையம், இன்றைக்குச் செயல்படாமல் இருக்கிறது. அந்த அடரி ஊராட்சிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக விரைவாக ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கக்கூடிய புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருவது குறித்த கோரிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு கனிவோடு எடுத்துச்சென்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் அதிகமாக இருக்கக்கூடிய Union Dispensary என்று சொல்லக்கூடிய கிராம மருந்தகங்கள் 50 வருடங்களாக ஒரே நிலைமையில் இருந்து கொண்டிருக்கின்றன. அவற்றை மக்கள் நல்வாழ்வுத் துறையின்கீழ் எடுத்து ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றுவதற்கு அரசிடம் திட்டம் இருக்கின்றதா? குறிப்பாக, தம்பிக்கோட்டை வடகாடு பகுதியில் இருக்கக்கூடிய கிராம மருந்தகத்தைத் தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

2014 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த* Union Dispensary-*ஐ ஆரம்ப சுகாதார நிலையமாக* absorb *செய்வதற்கான, மாற்றுவதற்கான திட்டம் அரசினுடைய ஆய்வில் இருந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, விரைவிலே அது நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு பொது இடங்களுக்குள் நுழைவதற்கான (ஆடைமீதான தடையை நீக்குதல்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது இடங்களுக்குள் நுழைவதற்கான (ஆடைமீதான தடையை நீக்குதல்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது இடங்களுக்குள் நுழைவதற்கான (ஆடைமீதான தடையை நீக்குதல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)